# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2051 • மார்ச் 7, 2020

Weekly E-paper • March 7, 2020




# ரஜினியின் வாயசைப்பும் பாண்டேயின் பொழிப்புரையும்!

• சுப.வீரபாண்டியன்

**பரம்பரை எதிரிகளின் பண்பாட்டுப் படையெடுப்பு**

வெற்றிச்செல்வன்

**கல்வியில் காவிநிறம்**

தலையங்கம்

நூல் அறிமுகம்

**நம்பிக்கைகளும் மூடநம்பிக்கைகளும்**

ஜனனி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2051 • மார்ச் 7, 2020 Weekly E-paper • March 7, 2020


# ரஜினியின் வாயசைப்பும் பாண்டேயின் பொழிப்புரையும்!

- சுப.வீரபாண்டியன்

*இரண்டு ஆண்டுகளுக்கு முன், 31.12.2017 அன்று, தான் அரசியலுக்கு வரப்போவது உறுதி என்றும், அடுத்த தேர்தலில் 234 தொகுதிகளிலும் தன் கட்சி போட்டியிடும் என்றும், அதனைப் போர் வரும்போது அறிவிப்பேன் என்றும் ரஜினி சொன்னார்.*

*அடுத்து என்ன நடக்கும் என்று அப்போது தந்தி தொலைக்காட்சியில் இருந்த பாண்டேவிடம் கேட்டனர். "அவ்வளவுதான், இனி ரஜினி சைலன்ட் மோடுக்குப் போய்விடுவார். அடுத்த திரைப்படத்தில் கவனம் செலுத்துவார்" என்றார் பாண்டே.*

*அதுதான் நடந்தது.*

*இப்போது மீண்டும் நேற்று (05.03.2020) தன் ரசிகர் மன்றப் பொறுப்பாளர்களைச் சந்தித்த பின், ஊடகவியலாளர்களிடம், "இன்று மாவட்டச் செயலாளர்கள் சந்திப்பு மிக நன்றாக நடந்தது. ஆனாலும் ஒரு விஷயத்தில் எனக்கு ஏமாற்றம்தான். அது என்னவென்று நேரம் வரும்போது சொல்கிறேன்" என்று ஒரு எதிர்பார்ப்பை (திரைப்படங்களில் வருவது போல ஒரு சஸ்பென்ஸ்) ஏற்படுத்திவிட்டு, அடுத்த நிமிடம் அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டு விட்டார்.*

*அவருக்கு என்ன ஏமாற்றம் நேர்ந்திருக்கும் என்று எல்லா ஊடகங்களும் விவாதித்துக் கொண்டிருக்கின்றன.*

*நோக்கம் நிறைவேறிவிட்டது.*

*மக்களுக்கு அன்றாடம் ஆயிரம் சிக்கல்கள் வாழ்வில் ஏற்படுகின்றன. பொருளாதார வீழ்ச்சி, வேலையில்லாத் திண்டாட்டம், சமஸ்கிருதப் பண்பாட்டுப் படையெடுப்பு, குடியுரிமைச் சட்டம் ஏற்படுத்தப்போகும் எதிர்காலச் சிக்கல்கள், சாதிய மோதல்கள் என எல்லாவற்றையும் விட்டுவிட்டு, ரஜினிக்கு எது ஏமாற்றம் தந்திருக்கும் என்பது குறித்து ஊடகங்கள் கவலைப்பட்டு, மக்களையும் கவலைப்பட வைத்துள்ளன.*

*ஊடகங்களில் ஆளுக்கொன்று பேசினார்கள். எதுவும் உண்மையில்லை. யாருக்கும் எதுவும் தெரியவில்லை.*

*ஆனால் தன் வலையொளியில் (YouTube) பாண்டே 26 நிமிடங்கள் பேசினார். அவர் பேசியதுதான் உண்மையாக*



*இருக்க முடியும். என்ன காரணம்? எப்படிப் பாண்டேயை மட்டும் நம்புவது? அவருக்கு மட்டும் எப்படி எல்லா உண்மைகளும் தெரிந்துவிடும்?*

*விடை எளிது. "ஆண்டவன் சொல்றான், அருணாச்சலம் செய்யுறான்" என்பதே விடை. இது ஒரு நாடகம். இவர்கள் எல்லோரும் நடிகர்கள். ரஜினியை வாயசைக்கச் சொல்கிறார்கள். பாண்டேயைப் பொழிப்புரை எழுதச் சொல்கிறார்கள்.*

*இது ஒரு பச்சைப் பார்ப்பன நாடகம். இதில் பாண்டே போன்றவர்களுக்கு ஒரு முக்கியப் பாத்திரம் வழங்கப்பட்டுள்ளது.*

*இதனைத் தமிழருவி மணியனை வைத்துச் சொல்லச்*

- தொடர்ச்சி 2-ஆம் பக்கம்

ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

உதவி ஆசிரியர்கள்
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
ஸ்ரீவித்யா

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்
suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-2472 6408

## 2-ஆம் பக்கத் தொடர்ச்சி...

சொல்லியிருக்கலாம். ஆனால் அவர் தனக்கு கொடுக்கப்படும் 30 நிமிடங்களில், கொஞ்சம் 'ஓவர் ஆக்ட்' செய்து, 10 நிமிடங்கள் தன்னைப் பற்றி பேசி விடுவார். 50 ஆண்டு காலப் பொதுவாழ்வில், தான் ஒரு செப்புக்காசு கூட யாரிடமும் வாங்கியதில்லை என்பது குறித்தும், தனக்குப் பதவியில் ஆசையில்லை என்பது குறித்தும் அவரால் பேசாமல் இருக்க முடியாது. அதற்கெல்லாம் நேரமில்லை. இது ஒரு குறும்படம். எனவே இயக்குனர்கள் அதனை அனுமதிக்க முடியாது. பாண்டேதான் நல்ல நடிகர். இதற்குப் பொருத்தமானவர் என்று முடிவு செய்திருப்பார்கள்.

சரி, பாண்டே சொன்ன பொழிப்புரை என்ன?

ரஜினி மூன்று வினாக்களைக் கூட்டத்தில் முன்வைத்தாராம்.

1. வரும் தேர்தலில் 60-65 விழுக்காடு இளைஞர்களுக்குத்தான் வாய்ப்பு தரப்படும். நீங்கள் போட்டியிட வாய்ப்பில்லை என்றால், அதனை ஏற்றுக் கொள்வீர்களா?

2. தேர்தல் முடிந்தவுடன், மாவட்டச் செயலாளர் போன்ற மிக முக்கியமான சில பதவிகளைத் தவிர மற்ற அனைத்தும் கலைக்கப்பட்டுவிடும். இது உங்களுக்குச் சம்மதமா?

3.முதலமைச்சர் பதவிக்கு இன்னொருவரை நியமித்து விட்டு, நான் கட்சித் தலைவராக மட்டும் இருந்துகொண்டு, ஆட்சியையும், கட்சியையும் இயக்குவேன். ஏற்றுக்கொள்வீர்களா?

முதல் இரண்டு கேள்விகளுக்குச் சரி என்று சொன்னவர்கள், மூன்றாவது கேள்விக்கு ஒருமனதாக முடியாது என்று சொல்லிவிட்டார்களாம். அதுதான் ரஜினிக்கு ஏமாற்றமாம்.

பாண்டே தந்திருக்கும் பொழிப்புரை இதுதான், இதன் உட்பொருள், பொதுமக்களுக்கோ, ஊடகவியலாளர்களுக்கோ மட்டுமில்லை, நேற்று கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் தெரிந்திருக்காது என்பதே உண்மை.

அதாவது, பதவியை விரும்பாத, தியாகத்தின் திருவுருவமான ரஜினிகாந்த், புறவாசல் வழியாகச் சர்வாதிகாரியாக விரும்புகிறார் என்பதே இதன் பொருள். இது இதுவரையில் நடக்காத புதுமை என்கிறார் பாண்டே. பன்னீர்செல்வத்தை முன்னால் நிறுத்தி, ஜெயலலிதா பின்னால் இருந்து நடத்திய ஆட்சியை நாம் எப்போதோ பார்த்து விட்டோம். அதுநீதிமன்றத்தால் ஏற்பட்ட நிர்ப்பந்தம். இது தந்திரம்!

இதனை மன்றப் பொறுப்பாளர்கள் ஏற்க மாட்டார்கள் என்பது சிறு பிள்ளைக்கும் தெரியும், பிறகு ஏன் இந்த நாடகம்? 'பதவியும் வேண்டாப் பண்பாளர்' என்று ஒரு காட்சி அமைத்து, ரஜினியின் தியாக பிம்பத்தை இன்னும் சற்று உயர்த்துவதற்காகத்தான்!

எல்லாம் சரிதான், ஆனால் அடுத்த முதலமைச்சர் யாரென்பதை, ரஜினியோ, பாஜகவோ, பாண்டேயோ முடிவு செய்ய முடியாது. அதனைச் சரியான முறையில், சரியான நேரத்தில் தமிழக மக்கள் முடிவெடுப்பர்கள்! ●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## கல்வியில் காவிநிறம்

இந்தியாவின் புகழ்பெற்ற பல்கலைக் கழகங்களில் சென்னை அண்ணா பல்கலைக் கழகம் குறிப்பிடத்தக்க ஒன்று.

இப்பல்கலைக் கழகத்தில் ஆளுநர் பன்வாரிலாலால் துணைவேந்தராக நியமிக்கப்பட்டவர் குமரப்பா. இவர் துணைவேந்தராக பொறுப்பேற்ற பிறகு, மாணவர்கள் மீது தாக்குதல்களும், உணவு அடிப்படையில் சாதிய, மத வேறுபாடுகளும் அதிகமாயின.

இதே பல்கலைக் கழகத்தின் மாணவி கேரளாவின், கொல்லத்தைச் சேர்ந்த 19 வயது பாத்திமா லத்தீஃப் தற்கொலை செய்துகொண்டார்.

மதம் சார்ந்த துன்புறுத்தல்களுடன் அம்மாணவிக்கு ஏற்படுத்தப்பட்ட மன உளைச்சலும் அதற்குக் காரணமாக அமைந்தது.

மாணவி பாத்திமா லத்தீஃப்புக்கு இத்தகைய உளவியல் சார்ந்த, மதஅடிப்படையிலான கொடுமையைச் செய்தவர்கள் சுதர்சன் பத்மநாபன், மிலிந்த் பிராம், ஹேமச்சந்திர காரா என்பவர்கள்தான் என்பதை பாத்திமாவின் கைப்பேசியிலிருந்து காவலர்கள் கண்டுபிடித்துள்ளனர். அவர்கள் மீது இதுவரை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பது புரியாத புதிராக இருக்கிறது.

அண்ணா பல்கலைக் கழகத்திற்குச் சிறப்பு அந்தஸ்தை மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகம் கொடுத்திருந்த போதும், இப்பொழுது அப்பல்கலைக்கழகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு விட்டது.

இவைகளுக்குப் பின்னால் காவிகளின் கை மேலோங்கி இருக்கிறது.

இது ஒருபுறமிருக்க, இப்பொழுது சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் தேடுதல் குழுவில் ஜெகதீஷ்குமார் என்பவர் நியமிக்கப்படுகிறார். இவர் புகழ்பெற்ற டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர்.

ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகம் இடதுசாரி முற்போக்குச் சிந்தனையாளர்களால் உருவாக்கப்பட்டு அதே வழியில் மாணவர்களும் உருவான இடம்.

இதைப் பொறுக்க முடியாத காவிகள், ஆர்.எஸ். எஸ்.ஸின் மாணவர் அமைப்பான ஏ.பி.வி.பி என்ற அமைப்பை உருவாக்கினார்கள்.

முற்போக்கு மாணவர் அமைப்பைப் பொறுக்க முடியாத ஏ.பி.வி.பி அவர்கள் மீது தாக்குதல்களை நடத்தி இருக்கிறார்கள்.

குறிப்பாக முகமூடி அணிந்துகொண்டு வகுப்பிலும், நூலகங்களிலும் படித்துக் கொண்டிருந்த மாணவர்கள் மீது கடுமையாக தாக்குதல்கள் நடத்தி இருக்கின்றனர். ஜே.என்.யு மாணவர் சங்கத் தலைவர் அயிஷ் கோஷ் கடுமையாக தாக்கப்பட்ட நிலையில், இத்தாக்குதலுக்குத் துணைவேந்தர் ஜெகதீஷ்குமாரும், காவல்துறையினரும் உடந்தையாக இருந்தனர் என்று குற்றம் சாட்டுகிறார்.

இவரைத்தான் இப்போது புதிய பொறுப்பில் நியமிக்கிறார் தமிழக ஆளுநர்.

தமிழகத்தின் கல்வித்துறையின் மீது நடத்தப்படும் இந்தியமனத் தாக்குதலை வன்மையாக மக்கள் கண்டிக்க வேண்டும்.

## எல்.சி.குருசாமி கருத்தரங்கம்



18-2-2020 அன்று சென்னை அன்பகத்தில் நடைபெற்ற மாமனிதர் எல்.சி.குருசாமி குறித்த கருத்தரங்கில் தோழர் விஜயலட்சுமி தலைமையில் தோழர்கள் சுப.வீரபாண்டியன், சாரதாதேவி, குண.சந்திரசேகர், இக்லாஸ் உசேன் ஆகியோர் உரையாற்றினர்.

## தளபதி பிறந்த நாள்



3-3-2020 அன்று அனகாபுத்தூரில் திமு கழகம் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் சுபவீ உரையாற்றினார். மேடையில் மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன், இ.கருணாநிதி, மீ.அ.வைத்தியலிங்கம், நரேஷ் கண்ணா, நெப்போலியன் ஆகியோர் அமர்ந்துள்ளனர்.

## குடியுரிமை திருத்தச் சட்ட எதிர்ப்பு



3-3-2020 அன்று, பல்லாவரம் இனயத் மகால் அருகில் CAA எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களிடம் தோழர் சுப.வீரபாண்டியன் ஆதரவு தெரிவித்து உரையாற்றினார்.

## பேரவையின் மாதாந்திரக் கூட்டம்



1-3-2020 அன்று திண்டுக்கல் மாவட்டப் பேரவையின் மாதாந்திரக் கூட்டம் 'புத்தகப் பூங்கா'வில் நடைபெற்றது. எதிர்வரும் மார்ச் 19-ஆம் நாள் திண்டுக்கல்லில் பொதுச்செயளாலர் சுப.வீரபாண்டியன் சிறப்புரையில் சிஏஏ எதிர்ப்புக் கருத்தரங்கம் நடத்த முடிவு செய்யப்பட்டது.

## சென்னை மாவட்ட மாதாந்திரக் கூட்டம்



1-3-2020 அன்று சென்னை பேரவையின் தலைமை அலுவலகத்தில் சென்னை மாவட்ட மாதாந்திரக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் ஏப்ரல் 5- ஆம் தேதி, சென்னை மாவட்டம் சார்பில் தேனாம்பேட்டை அன்பகத்தில் சென்னை, காஞ்சி, திருவள்ளூர் மாவட்டப் பேரவைத் தோழர்களுக்குப் பயிலரங்கம் நடத்தத் திட்டமிடப்பட்டது. பேரவை நாளுக்காகச் சென்னை மாவட்டத்திற்கு நிதி திரட்டும் குழு உருவாக்கப்பட்டது. அக்குழு உறுப்பினர்கள்: கார்த்தி, ஜெயசூர், சாதா தேவி, பாரதி, நன்முகில், விமலநாதன் ஆகியோர் ஆவர்.






# பரம்பரை எதிரிகளின் பண்பாட்டுப் படையெடுப்பு

**வெற்றிச்செல்வன்**

*இது ஆத்திகர் - நாத்திகர் உரிமைப் பிரச்சினை அல்ல; மாநிலங்களின் உரிமைப் பிரச்சினை. தனிநபர்கள் வடநாட்டில் கோவில்களை வைத்துப் பிழைப்பு நடத்தும், பார்ப்பனச் சுரண்டலுக்காகவே பயன்படுத்தும் பேராபத்துகள் இங்கு தடுத்து நிறுத்தப்படவேண்டும்.*

-ஆசிரியர் கி. வீரமணி
(விடுதலை, 03.03.2020)

### பேரவையின் சமூக நீதி மாநாடு, 2018. தீர்மானம் 1

**நீதிக் கட்சி ஆட்சியில் உருவாக்கப்பட்ட இந்து சமய அறநிலையத் துறையைக் கலைப்பதற்கான பெருமுயற்சி ஒன்று, தன்னலம் மிக்க கூட்டம் ஒன்றினால் இப்போது தொடங்கப்பட்டுள்ளது. இந்துக் கோயில்களை இந்துக்களிடம் கொடுத்து விடுங்கள் என்பதாக அக்கோரிக்கை முன்வைக்கப்பட்டாலும், அதில் எள்ளளவும் உண்மையில்லை. இந்துக்கள் என்னும் பெயரில், வெறும் மூன்று விழுக்காடு மட்டுமே உள்ள ஒரு குறிப்பிட்ட சாதியினர், மொத்தக் கோயில் சொத்துக்களையும் தாங்கள் மட்டும் அபகரித்துக் கொள்வதற்கான திட்டமே இது. எனவே தங்களை இந்துக்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கும் கோடிக்கணக்கான வெகுமக்களின் சொத்துகளைப் பாதுகாக்கும் கடமை, கடவுள் நம்பிக்கை உடையவர்களுக்கு மட்டுமின்றிப் பகுத்தறிவாளர்களுக்கும் உள்ளது.**

**ஆதலால், எக்காரணம் கொண்டும் இந்து அறநிலையத் துறை கலைக்கப்படக் கூடாது என்று இம்மாநாடு வலியுறுத்துவதுடன், தில்லை நடராசர் கோயிலையும், தீட்சிதர்களிடமிருந்து மீண்டும் அரசு மீட்டெடுக்க வேண்டும்.**

மத்திய கலை மற்றும் பண்பாட்டுத்துறை அமைச்சர் பிரகலாத் சிங் பட்டேல், மாநிலங்களின் கட்டுப்பாட்டில் உள்ள நினைவுச் சின்னங்களையும், கோயில்களையும் ஆய்வுக்கு உட்படுத்தி, இந்தியத் தொல்லியல் துறையின்கீழ் அவற்றைச் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மக்களவையில் அறிவித்துள்ளார்.

இதனை எதிர்த்துக் கடுமையான கண்டனங்கள் எழுந்துள்ளன. தமிழக எதிர்க்கட்சித் தலைவர் மு.க. ஸ்டாலின், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி, பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் இராமதாஸ் ஆகியோர் தமது எதிர்ப்புக் குரல்களைப் பதிவு செய்துள்ளனர்.

இந்துக்களுக்கான ஆட்சியை நடத்துவதாகச் சொல்லிக் கொள்ளும் பா.ஜ.க.-வின் ஆட்சி “பார்ப்பனர்களுக்கானதே” என்பதைத் தனது செய்கைகளின் மூலம் தொடர்ந்து நிரூபித்துக் கொண்டு வருகிறது நடுவண் அரசு. கோயில்களை விட்டு அரசு வெளியேற வேண்டும் என்பதைத் தொடர்ந்து முன்னெடுத்து வரும் பா.ஜ.க.-வின் முயற்சிகளில் ஒன்றே இது என்பதுதான் வெளிப்படையான உண்மை. கடந்த ஆண்டு, மக்களவையில் சத்யபால் சிங் என்ற பா.ஜ.க. உறுப்பினரின் மூலம் கோயில்கள் அரசு கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் தனிநபர் மசோதா ஒன்றைக் கொண்டு வரச் செய்தது நடுவண் அரசு. தற்போது தொல்லியல் துறை என்ற முகமூடியை அணிந்து கொண்டு தனது திட்டத்தை நிறைவேற்றப் பார்க்கிறது.

கோயில்களிலிருந்து அரசு வெளியேற்றப்பட வேண்டும் என்ற முயற்சிக்கு ஆதரவோ, அரசு வெளியேறுவதற்கான சாத்தியக்கூறுகளோ தமிழ்நாட்டில் இல்லாத நிலையில், மறைமுகமாக அதனை நிறைவேற்றத் தொல்லியல் துறையைப் பயன்படுத்த நினைக்கிறது பா.ஜ.க. இதற்கான காரணங்கள் எதையும் மத்திய அமைச்சர் தனது பேச்சில் குறிப்பிடவில்லை. மத்திய அரசால் பாதுகாக்கப்படும் நினைவுச் சின்னங்களின் எண்ணிக்கை பல ஆண்டுகளாகப் பெருமளவு அதிகரிக்கவில்லை என்று குறிப்பிடும் அமைச்சர், தமிழ்நாட்டில் மட்டுமே நூறாண்டுகளைக் கடந்த 7,000-க்கும் மேற்பட்ட கோயில்கள் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டிலுள்ள கோயில்கள் இந்து சமய அறநிலையத்துறையின்கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இதில் இந்தியாவிற்கே முன்னோடியாகத் தமிழகம் செயல்பட்டு வருகிறது. தொல்லியல் துறையின்கீழ் கோயில்களைக் கொண்டு வருவது, பார்ப்பனர்களிடம் அவற்றை ஒப்படைப்பதற்கான தொடக்க நிலைதான். இந்து சமய அறநிலையத் துறையை ஒழித்துக் கட்டுவதுதான் இதன் பின்னணி.

தொல்லியல் துறையால் நிர்வகிக்கப்படும்போது கோயில்கள் தரமாகப் பராமரிக்கப்படும் என்றும், இப்போதுள்ள தரம் மேலும் மேம்படுத்தப்படும் என்றும் தொடர்ந்து ஒரு பிரச்சாரம் முன்வைக்கப்படுகிறது. அது தவறான பிரச்சாரம் என்பதற்கு 2013-ஆம் ஆண்டு இந்தியத் தலைமைக் கணக்கு அலுவலரின் (CAG) அறிக்கையே சான்றாகும். மொத்தம் 1655 நினைவுச் சின்னங்களில் ஆய்வு நடத்தப்பட்டதில், அவற்றுள் 546 ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியிருந்தன என்கிறது அவ்வறிக்கை. கடந்த ஆண்டு மே மாதம், ஒடிசாவின் ஜகந்நாதர் கோயில் நிர்வாகத்திடம் மன்னிப்புக் கேட்டது தொல்லியல் துறை. தொல்லியல் துறை அமைத்திருந்த இரும்புச் சாரங்கள் அதன் அலட்சியப் போக்கால் பானிப் புயலின் போது கோயில் சிலைகளின் மீது விழுந்து சிலைகளைச் சேதப்படுத்தியதே அதற்குக் காரணம்.

நிலைமை இவ்வாறிருக்க, இதே பா.ஜ.க. அரசால் 2018-ஆம் ஆண்டு மக்களவையில் மட்டும் நிறைவேற்றப்பட்ட பழங்காலச் சின்னங்கள் மற்றும் தொல்பொருள் இடங்கள் & எச்சங்கள் திருத்த மசோதா (The Ancient Monuments and Archaeological Sites and Remains (Amendment) Bill) பழங்காலச் சின்னங்களுக்கு அருகே பொது நலனுக்காக அரசு நிதியில் கட்டப்படும்

- தொடர்ச்சி 2-ஆம் பக்கம்



M.K.Stalin
@mkstalin

தமிழக நினைவுச் சின்னங்கள், கோயில்களை கைப்பற்ற நினைக்கும் மத்திய அரசின் முயற்சிக்கு கண்டனம் தெரிவிக்காமல் முதலமைச்சர் பழனிசாமியும், அமைச்சர் பாண்டியராஜனும் மவுனம் சாதிப்பது ஏன்?

தமிழர் நாகரிகத்தைச் சிதைக்கும் கலாச்சாரப் படையெடுப்பை திமுக ஒருபோதும் அனுமதிக்காது.

# நம்பிக்கைகளும் மூடநம்பிக்கைகளும்

**நூல் அறிமுகம் - ஜனனி**




நம்பிக்கைகளும் மூடநம்பிக்கைகளும் என்னும் சிறு நூலைத் தோழர் தீக்கதிர் குமரேசன் அவர்கள் எழுதிக் கருஞ்சட்டைப் பதிப்பகம் வெளியிட்டிருக்கிறது. இந்நூலின் சாராம்சம் நம்பிக்கைக்கும் மூடநம்பிக்கைக்குமான வேறுபாடு. மூடநம்பிக்கைகளின் மூலம் பயனடைவோர் யார், பாதிக்கப்படுகிறவர்கள் யார், பார்ப்பனர்களிடம் மூடநம்பிக்கை குறைவாகவும் மற்ற சமூக மக்களிடம் அதிகமாகவும் இருப்பதற்குக் காரணம் என்ன என்று பல கேள்விகளை எழுப்பி அதற்கு நிறைவான பதிலையும் தருகிறார் இந்நூலின் ஆசிரியர்.

நாம் பலர் இப்படிச் சொல்வதைக் கேட்டிருப்போம். எனக்கு மூட நம்பிக்கை கிடையாது ஆனால் கடவுள் நம்பிக்கை உண்டு என்பார்கள். கடவுள் நம்பிக்கையே மூடநம்பிக்கை தானே! ஐன்ஸ்டீன் கூற்றின்படி *"The word God is for me nothing more than the expression and product of human weaknesses"*. மனிதனின் அச்சத்திலிருந்தே மூடநம்பிக்கை உருவாகிறது. இந்நூலின் ஆசிரியர் மொழியில் "ஒன்றைச் செய்தால் அல்லது செய்யத் தவறினால் தீங்கு விளையும் என்ற அச்சத்தின் அடிப்படையில், தீங்கைத் தவிர்க்க அல்லது ஏற்கனவே ஏற்பட்டுவிட்ட தீங்கைப் போக்க ஒரு மாற்றுச் செயலைக் கடைபிடிப்பதே மூடநம்பிக்கை எனலாம்." மூடநம்பிக்கைகள் குடும்பம், சமூகம், சமயம் என்று பல கட்டமைப்புகளின் அறிவுரைகளாகப் பயிற்றுவிக்கப்படுகின்றன.

மூடநம்பிக்கைகள் நிரம்பியிருக்கும் எந்த ஒரு சமூகமும் முன்னேறாது என்று பொதுவில் சொன்னாலும் இவற்றால் பெரிதும் பாதிக்கப்படுவது பெண்களே! எந்த நாட்டிலாவது தான் முதலில் இறந்து விட வேண்டும் என்று கடவுளிடம் வேண்டிக் கொண்டு விரதம் இருப்பார்களா? வரலட்சுமி நோன்பு என்கின்ற பெயரில் இந்த "பாரத தேசத்தில்" தான் இது நிகழும். இந்நூலின் ஆசிரியர் கூறுவது போல 70% பெண்கள் இரத்தசோகையால் பீடிக்கப்பட்டுள்ள நாட்டில் இப்படியான விரதச்சடங்குகள் அவர்களது உடல்நலத்தை மேலும் பாதிக்கின்றன, உற்சாகமான செயல்பாட்டைக் கெடுக்கின்றன.

தீபாவளி சமயத்தில் DSM என்னும் அமைப்பு "Project Sthreedhan" என்னும் விளம்பரத்தை வெளியிட்டது. அந்த விளம்பரத்தின் கடைசி வரி இப்படி முடிகிறது. இந்தியாவில் வாழும் பெண்களில் இரண்டில் ஒருவருக்கு இரத்தசோகை இருக்கிறது. இந்தப் பண்டிகைத் திருநாளில் தங்கத்தில் முதலீடு செய்யாமல், பெண்கள் தங்களுடைய இரும்புச்சத்தை மேம்படுத்துங்கள். தங்க நகைகள், பட்டுப்புடவைகள் விளம்பரங்கள் அதிகம் வரும் பண்டிகைக் காலங்களில் இதுபோன்ற விளம்பரங்கள் வருவது நல்ல விழிப்புணர்வைச் சமுதாயத்தில் ஏற்படுத்தும்.

இறைநம்பிக்கையுள்ள அறிவியலாளர்கள் தங்கள் கண்டுபிடிப்புகளில் கடவுளைக் கலப்பதில்லை. இராக்கெட் விடும் நேரத்தை அவர்கள் பஞ்சாங்கம் பார்த்து முடிவு செய்வதில்லை. கோள்களின் நிலை, பருவநிலை இவற்றைக் கணக்கிட்டே முடிவு செய்கிறார்கள். விண்ணில் நிறுத்தப்படும் செயற்கைக்கோளின் தகவல்கள் கடவுளால் வழங்கப்பட்டவை என அறிக்கை அளிப்பதில்லை. ஆனால் தங்களது முயற்சியில் அனுப்பப்பட்ட செயற்கைக்கோள் வெற்றிகரமாக இயங்குவதற்குக் காரணம் கடவுள்தான் என்ற நம்பிக்கையோடு மனத்திற்குள் வணங்குவார்கள். அறிவியலற்ற அறிவியலாளர்களைக் கொண்டு இயங்கும் சமூகம், அடுத்தகட்ட முன்னேற்றத்தை நோக்கிச் செல்லாது என்பதை ஆசிரியர் தெளிவுபடுத்துகிறார்.

நம்பிக்கைகளைக் கேள்வி கேட்கக் கூடாது என்று கூறியவர்கள் தற்போது இந்த மூடநம்பிக்கைகளுக்குப் பின்னால் ஒரு அறிவியல் இருக்கிறது என்று நம்முடன் வாதிட முற்படுகிறார்கள். மக்களை மூடநம்பிக்கைகளில் இருந்து வெளிக்கொண்டுவர அறிவியலைப் பயன்படுத்த வேண்டிய வேளையில் இங்கு அறிவியலையே மூடநம்பிக்கைகளுக்குள் மூடிவிடுகிறார்கள். இது மிகவும் ஆபத்தானதாகும். பரிணாம வளர்ச்சி பின்னோக்கிச் சென்றுவிடும்.

மூடநம்பிக்கைகளுக்குள் மூழ்கிப் போயிருக்கும் இந்தச் சமூகம் மூளையைப் பயன்படுத்தும் காலம் வரவேண்டும். அதற்கு இது போன்ற நூல்கள் அதிகம் வெளிவரவேண்டும். ●

**நம்பிக்கைகளும் மூடநம்பிக்கைகளும்**
**ஆசிரியர் : தீக்கதிர் அ.குமரேசன்**
**வெளியீடு: கருஞ்சட்டைப் பதிப்பகம்**
**விலை: ரூ.25**
**தொடர்புக்கு: 9940407468, 044 247226408**

---

## 2-ஆம் பக்கத் தொடர்ச்சி...

கட்டடங்களை அனுமதிக்கிறது. இது பழங்காலச் சின்னங்களுக்கு 100 அடிக்குக் குறைவான தூரத்தில் கட்டடங்கள் எதுவும் கட்டப்படக்கூடாது என்று ஏற்கெனவே உள்ள சட்டத்திற்கு முரணானது. இதன் மூலம் கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள பெருநிறுவனங்களின் வணிக நோக்கிற்கு உதவுவதற்காக அரசு இச்சட்டத்தைக் கொண்டுவர முயற்சிப்பதாகவும் ஐயம் எழுந்துள்ளது. கோயில்களைத் தொல்லியல் துறைக்குக் கீழ் கொண்டு செல்லும் முயற்சிக்குப் பின்னால் இது போன்ற பல சந்தேகங்கள் எழுந்துள்ளன.

கோயில்கள் மாநிலங்களின் பண்பாட்டு அடையாளங்கள். தொடர்ந்து மாநில உரிமைகளுக்கு எதிராக நடந்து வரும் மத்திய அரசின் முயற்சி கடுமையாக எதிர்க்கப்பட வேண்டும். பண்பாட்டுச் சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அரசியலமைப்பின் பொதுப் பட்டியலில் உள்ள அறநிலையங்கள் (Charitable institutions, religious endowments and religious institutions) மீண்டும் மாநிலப் பட்டியலுக்குக் கொண்டுவரப்பட வேண்டும், அல்லது தொடர்ந்து மாநிலங்களின் உரிமைகளைச் சிதைக்கும் பொதுப் பட்டியல் அரசியலமைப்புச் சட்டத்திலிருந்தே நீக்கப்பட வேண்டும். அதுவே இறுதியான தீர்வாக இருக்கும்.

கீழடி அகழ்வாராய்ச்சிக்குத் தடை போட்ட மத்திய அரசுக்கு, இப்போது தமிழகக் கோயில்களின் மேல் திடீர் அக்கறை பிறந்துள்ளது. பூனை தன் குட்டியைக் கவ்வுவதற்கும், பருந்து கோழிக்குஞ்சைக் கவ்வுவதற்கும் உள்ள வேறுபாட்டைத் தமிழர்கள் உணராதவர்கள் இல்லை. ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,